මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

**ஊடக அறிவித்தல் இல: LAE/2025/99** **2025.05.08**

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் - 2025.05.06

### 2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின் ஏற்பாடுகள்

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலில் போட்டியிட்ட அனைத்து வேட்பாளர்களும் வேட்பாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய அரசியல் கட்சிகளின் செயலாளர்களும் சுயேச்சைக் குழுக்களின் தலைவர்களும் 2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டத்திற்கிணங்க தமது தேர்தல் பிரச்சார வருமான செலவின விபரத்திரட்டுக்களை வெவ்வேறாக தயாரித்து 2025.05.27 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணி அல்லது அதற்கு முன்னர் அந்தந்த வேட்பாளர்களினாலும் அரசியல் கட்சிகளின் செயலாளர்களினாலும் சுயேச்சைக் குழுக்களின் தலைவர்களினாலும் தாம் போட்டியிட்ட உள்ளூர் அதிகார சபையின் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு ஒப்படைக்கப்பட வேண்டும்.

அதேபோல் அந்த வேட்பாளர்களுக்கு, வேட்பாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கு, சுயேச்சைக் குழுக்களின் தலைவர்களுக்கு தேர்தல் பிரச்சார வருமான செலவின விபரத்திரட்டுக்களை ஒப்படைப்பதை இயலச் செய்யும் வகையில், பொதுவான அலுவலக நாட்களில் பி.ப. 6.00 மணி வரையிலும் 2025.05.27 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணி வரையிலும் அனைத்து மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களின் தேர்தல் வருமான செலவின விபரத்திரட்டுக்களை ஒப்படைக்கும் விசேட அலகுகளைத் திறந்து வைத்திருக்க நடவடிக்கை எடுப்பதற்கு தேர்தல் ஆணைக்குழுவினால் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

மேலும், 2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின் 8(அ) ஆம் பிரிவிற்கிணங்க, 2025.05.27 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணி அல்லது அதற்கு முன்னர் தேர்தல் செலவின விபரத்திரட்டுக்களை ஒப்படைக்காதிருப்பதன் மூலம் சட்டவிரோதமான செயலொன்றான தவறொன்றைப் புரிந்தவராவதோடு அது தொடர்பில் தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டத்திற்கிணங்க சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பது மேலும் அறிவிக்கப்படுகிறது.

**ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க**
தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு
(தேர்தல் ஆணைக்குழு சார்பாக)